தமிழ்நாடு அரசு

சுருக்கம்

பொதுப்பணிகள் - பாரதிதாசன் பல்கலைக்கழத்தால் வழங்கப்படும் இளங்கலை கூட்டாண்மை செயலறியல் (B.A.Corporate Secretary Ship) பட்டப்படிப்பு தமிழ்நாடு அரசு தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் வழங்கப்படும் கணக்கியலில் கீழ்நிலை மற்றும் மேல்நிலை (Accountancy Lower and Higher Grade) கல்வித் தகுதிக்குச் சமமானதாகக் கருதி அங்கீகாரம் அளித்தல் ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை

அரசாணை நிலை எண்,216
நாள்,27.11. 2000

திருவள்ளுவர் ஆண்டு 2031
விக்கிரம கார்திகை 12,

படிக்கப்பட்டது:-

1. அரசாணை நிலை எண்.441, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள்.20.12.93.
2.தமிழ்நாடு மின்வாரிய தலைமைப் பொறியாளரின் கடித எண்.36125/248/கி.1/விஞ்சி/98-1. நாள்,/14/10/98.
3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையைச் செயலரது கடித எண்.5659/ஸிழிஞ்ரி-தி1/99, நாள்,16.5.2000.

-----

ஆணை:

தமிழ்நாடு மின்வாரிய தலைமைப் பொறியாளர் அவர்கள், பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் இளங்கலை கூட்டாண்மை செயலறியல் (B.A. Corporate Secretaryship) பட்டப்படிப்பு, தமிழ்நாடு அரசு தொழில்நுட்பக் கல்வி இயக்கத்தால் வழங்கப்படும் கணக்கியலில் கீழ்நிலை மற்றும் மேல்நிலை (Accountancy Lower and Higher Grade) கல்வித் தகுதிக்குச் சமமானதா என அரசைக் கேட்டிருந்தார்.

2, 20,12,93 நாளிட்ட பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அரசாணை நிலை எண்,441-ல் ஆணையிட்டவாறு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவரைக் தலைமையாகக் கொண்டு இதற்கென அமைக்கப்பட்ட குழுவின் முன்னர் தமிழ்நாடு மின்வாரிய தலைமைப் பொறியாளரின் கோரிக்கை பரிந்துரைக்காக வைக்கப்பட்டது

3 ,3,5,2000 அன்று நடந்த குழுக் கூட்டத்தில் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டு, பாரதிதாசன் பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் இளங்கலை கூட்டாண்மை செயலறியல் (B.A.Corporate

Secretaryship) பட்டப் படிப்பினைத் தமிழ்நாடு அரசு தொழில்நுட்பக் கல்வி இயக்கத்தால் வழங்கப்படும் கணக்கியலில் கீழ்நிலை மற்றும் மேல்நிலை (Accountancy Lower and Higher Grade) கல்வித் தகுதிக்குச் சமமானதாகக் கருதி அங்கீகாரம் அளிக்கலாம் என குழு அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது,

4.குழுவின் பரிந்துரையை அரசு, தீவிர பரிசீலனைக்குப் பின் ஏற்றுக்கொள்ள முடிவெடுத்துள்ளது. அவ்வாறே, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் இளங்களை கூட்டாண்மை செயலறியல் (B.A.Corporate Secretaryship)பட்டப்படிப்பினைத் தமிழ்நாடு அரசு தொழில்நுட்பக் கல்வி இயக்கத்தால் வழங்கப்படும் கணக்கியலில் கீழ்நிலை மற்றும் மேல்நிலை (Accountancy Lower and Higher Grade) கல்வித் தகுதிக்குச் சமமானதாகக் கருதிப் பொதுப் பணிகளில் வேலைவாய்ப்பிற்கு அங்கீகாரம் அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சை முனீர் ஹோதா
அரசுச் செயலர்.

பெறுநர்

அனைத்து அரசுச் செயலர்கள், சென்னை-9.ஷ
அனைத்துத் துறை தலைமை அலுவலர்கள்.
செயலர். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.
தலைமைப் பொறியாளர் (பணிகள்), தமிழ்நாடு மின்வாரியம், 800, அண்ணா சாலை, சென்னை-2.

நகல்:

முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறையிலுள்ள அனைத்துப் பிரிவுகள். சென்னை-9.

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.